# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2018

M

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 2.30 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20 x 1 = 20

1. வணிகம் எதனோடு தொடர்புடையது _______.
   a) பொருட்களின் உற்பத்தி b) பொருட்களின் பரிமாற்றம்
   c) வேலைவாய்ப்பைத் தோற்றுவிப்பது d) பணிகளைத் தோற்றுவிப்பது
2. _______ என்பது ஈ.வணிகம் எனக் குறிக்கப்படும்.
   a) விளம்பரம் b) தொழில் c) மின் அணு வணிகம் d) காப்பீடு
3. ஏற்றுமதிக்கான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டால் அவை _______ என அழைக்கப்படும்.
   a) வெளிநாட்டு வியாபாரம் b) உள்நாட்டு வியாபாரம்
   c) மறு ஏற்றுமதி வியாபாரம் d) வியாபாரம்
4. ஒரு சில்லறை வியாபாரிகள் _______ பொருட்களை வைத்திருப்பவர்.
   a) ஒரே மாதிரியான b) பெரிய அளவில் c) விலை உயர்ந்த d) வேறுபட்ட
5. இந்த சில்லறை விற்பனையின் மூலம் நுகர்வோருக்குத் தேவையான அனைத்து வகைப் பொருட்களும் ஒரே இடத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.
   a) மடங்குக்கடை b) தொலைத் தொடர்பு வழி வாணிகம்
   c) துறைவாரிப் பண்டகச் சாலை d) அஞ்சல் வழி வாணிகம்
6. _______ ஆம் ஆண்டில், ராக்டேல் முன்னோடிகள் நேர்மைச் சங்கம் என்ற அமைப்பை நெசவாளிகள் உருவாக்கினர்.
   a) 1945 b) 1944 c) 1844 d) 1845
7. கீழ்க்கண்டவற்றுடன் தொடர்புள்ள உலக வணிக அமைப்பு
   a) உலகளாவிய வணிக விதிகள் b) உள்நாட்டு வணிக விதிகள்
   c) மறு ஏற்றுமதி வணிக விதிகள் d) மேற்கூறிய ஏதுமில்லை
8. இறக்குமதியாளரிடமிருந்து பணம் பெறும் முறை
   a) மாற்று முறை ஆவணங்கள் பெறுதல் b) மாற்றுமுறை ஆவணத்தை வட்டம் செய்தல்
   c) கடன் கடிதம் பெறுதல் d) மேற்கூறிய அனைத்தும்
9. நீராவி என்ஜினைக் கண்டுபிடித்தவர்
   a) ஜேம்ஸ் வாட் b) கோபால் ஆர்.பாட் c) மோகினி சேதை d) பி.கே.கோஸ்
10. சைக்கிள் ரிக்ஷா உலகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு _______.
    a) 1850 b) 1847 c) 1972 d) 1867
11. பண்டகசாலையிடுதல் பின்வரும் தடையை நீக்குகிறது.
    a) காலம் b) இடம் c) நிதி d) உருவம்
12. _______ ஐ சான்றுப் பத்திரமாகக் கொடுத்து வங்கிகளில் நிதி உதவி பெற முடியும்.
    a) துறைமுக ரசீது b) வழங்கல் ஆணை
    c) பண்டக பொறுப்பாளர் ரசீது d) பண்டகசாலை சான்றாணை
13. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பணத்தை வைப்பு செய்வது
    a) நிலை வைப்பு b) சேமிப்பு வைப்பு c) தொடர் வைப்பு d) நடைமுறை வைப்பு
14. ஆறு மாதத்திற்கு மேலாக புழக்கத்திலுள்ள காசோலை பின்வருமாறு அழைக்கப்படுகிறது.
    a) காலக்கெடு முடிந்த காசோலை b) பின் தேதியிட்ட காசோலை
    c) சாதாரண காசோலை d) கீறலிட்ட காசோலை
15. காப்பீடு எதை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது?
    a) கூட்டுறவு b) வங்கியியல் c) நிதியியல் d) வணிகவியல்
16. மருத்துவக் காப்பீடு திட்டம் A-ன் படி, அதிகபட்ச பயன் எவ்வளவு?
    a) 10,000 b) 1,50,000 c) 1,00,000 d) 3,00,000
17. படித்தவரும், பாமரரும் பெருமளவில் இந்த விளம்பரத்தைக் கேட்கிறார்கள்.
    a) இணையதள விளம்பரம் b) செய்தித்தாள் விளம்பரம்
    c) வான்வெளி விளம்பரம் d) வானொலி விளம்பரம்

18. _______ ஆம் ஆண்டில் ஹாட் வையர்ட் இணையதளத்தின் முதல் இணைய தள விளம்பரம் வெளியானது.
a) 1975 b) 1984 c) 1912 d) 1994

19. நுகர்வோரின் தந்தை என கருதப்படுபவர் யார்?
a) ரால்ப் நேடர் b) மகாத்மா காந்தி
c) திரு.ஜான் எப் கென்னடி d) ஹஜ்-பஸ்கிர்க் மற்றும் ஜேம்ஸ்

20. _______ நாள் ஒவ்வொரு ஆண்டும் நுகர்வோர் நாளாக கொண்டாடப்படுகிறது.
a) 15 மார்ச் b) 15 நவம்பர் c) 8 மே d) 5 செப்டம்பர்

பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 21 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. வணிகத்தை வரையறுக்கவும்.
22. வியாபாரத்தை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?
23. அஞ்சல் வழி வாணிகம் என்றால் என்ன?
24. ஏற்றுமதி வணிகம் மற்றும் இறக்குமதி வணிகத்தின் இடைநிலையர்கள் யார்?
25. போக்குவரத்தின் முக்கியத்துவம் யாவை?
26. பண்டக காப்பு என்றால் என்ன?
27. வங்கி என்றால் என்ன?
28. மருத்துவக் காப்பீடு என்றால் என்ன?
29. விளம்பரத்தினால் நுகர்வோர்களுக்கு ஏற்படும் ஏதாவது இரண்டு நன்மைகளை எழுதுக.
30. தமிழ்நாட்டில் நுகர்வோர் இயக்கம் - சிறுகுறிப்பு தருக.

பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 31 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. மொத்த வியாபாரிக்கும், சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 3)
32. வர்த்தக நடவடிக்கைகளின் பிரிவுகள் யாவை?
33. நுகர்வோர் கூட்டுறவுப் பண்டக சாலையின் நன்மைகள் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.
34. உலகமயமாக்குதலின் நன்மைகளை விளக்குக.
35. நிலப் போக்குவரத்து என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.
36. பண்டக காப்பகத்தின் பணிகளில் ஏதேனும் மூன்றினை விளக்குக.
37. வங்கிகளின் முக்கியத்துவம் ஏதேனும் மூன்றினை விளக்குக.
38. காப்பீடு மற்றும் காப்பீட்டுறுதி - வேறுபடுத்துக.
39. குறிப்பு எழுதுக : அ) கழிவு முகவர்கள் ஆ) ஏலதாரர்கள்
40. நுகர்வோர் சார்ந்த சட்டங்கள் யாவை?

பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. வணிகத்தின் உட்பிரிவுகள் யாவை? *(அல்லது)*
நுகர்வோரின் உரிமை மற்றும் கடமைகளை விவரி. (ஏதேனும் 5)
42. மொத்த வியாபாரிகளின் நடைமுறைப் பணிகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 5) *(அல்லது)*
பல்வேறு வகையான விளம்பரச் சாதனங்களை விவரி. (ஏதேனும் 5)
43. துறைவாரிப் பண்டகச் சாலைகளுக்கும், மடங்குக் கடைகளுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5) *(அல்லது)*
காப்பீட்டின் தத்துவங்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.
44. ஏற்றுமதி வணிக முறைகளை விவரி. *(அல்லது)*
வாடிக்கையாளர் தந்த காசோலைக்கு எந்தெந்த சந்தர்ப்பங்களில் ஒரு வங்கியர் பணம் தர மறுக்கலாம்?
45. கொள்கலனாக்கம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? *(அல்லது)*
பல்வேறு வகையான பண்டக காப்பகங்களை விவரி. (ஏதேனும் 5)
46. வணிகத்தின் தடைகள் யாவை? அவை எவ்வாறு நீக்கப்படுகின்றன- (ஏதேனும் 5) *(அல்லது)*
வணிக வங்கியின் பணிகளை விளக்குக. (ஏதேனும் 5)
47. அஞ்சல் வழி வாணிகத்தின் சிறப்புக் கூறுகள் யாவை? *(அல்லது)*
தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் வாடிக்கையாளருக்கு அளிக்கக்கூடிய நன்மைகள் யாவை?